Seafood Exporters' Association of Sri Lanka

SEASL

# நீல நீச்சல் நண்டு

# Bulletin No.2

***July to December 2014***

*இலங்கை கடலுணவுத் திணைக்களத்தின் நீலநீச்சல் நண்டுகள் பற்றிய இரண்டாவது அமர்விற்கு வரவேற்கின்றோம். சர்வதேச குடியகல்வு திணைக்களம் தனது முதலாவது மீன்படித்திட்டக் கணிப்பீட்டை இலங்கையில் வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளது. சர்வதேச குடியகல்வு நிறுவனம் இலங்கையின் புத்தளம் கடல்நீரேரியில் நண்டு பிடிப்பதற்கான வளங்களையும் ஆலோசனைகளையும் SEASL SLBSC இன் மீன்பிடிமுன்னேற்றச் செயற்திட்டத்தினூடாக வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றது.*

IOM • OIM

***புத்தளம் கடல்நீரேரியின் மீன்பிடித்தலைக் கணிப்பிடல்:*** *இலங்கையின் நீல நீச்சல் நண்டுபிடிக்கும் தளங்களில் புத்தளம் கடல்நீரேரியும் ஒன்றாகும். சர்வதேச குடியகல்வு நிறுவனம் புத்தளம் கடல்நீரேரியில் நீலநீச்சல் நண்டு பிடிப்பதற்கான தொடர்ச்சியான களச்செயற்பாடுகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை SLBSC இன் மீன்பிடிமுன்னேற்றச் செயற்திட்டத்தினூடு யூன் தொடக்கம் டிசம்பர் வரை எடுத்துவந்தது.*




இலங்கையில் IOM இன் மீனவ முன்னேற்றச்செயற்திட்டத்தின் நண்டுபிடித்தலின் முதலாவது தொகைமதிப்பீடு பலக்குடா, ஆனவாசல், பத்தளாங்குண்டுவ ஆகிய இடங்களில் நீளஅடிப்படையிலான உற்பத்தித்திறன்மூலம் நிறைவேற்றப்பட்டது. தளத்தரவுகள் அவுஸ்திரேலியாவின் Murdoch University, இன் இருவிரிவுரையாளர்களால் பகுப்பாய்வு செய்யப்பட்டது, இதன் பெறுபேறாக மீன்பிடித்தலில் நீள அடிப்படையிலான உற்பத்தித்திறன் 0.46 எனக்குறிப்பிடப்படுகின்றது. ஆத்துடன் மீன்களின் இறப்புவிகிதத்திற்கு இயற்கையின் இறப்புவிகிதம் 1.03 ஆகும். இதன்முடிவாக தற்போது புத்தளம் கடல்நீரேரியில் நீல நீச்சல் நண்டு பிடித்தல் குறிப்பிட்ட சட்டபூர்வமான மட்டத்தை அடைந்துள்ளது.





புத்தளம் கடல்நீரேரியில் முதற் தொகைமதிப்பீடு பற்றி நவம்பரில் மீனவ சங்கத்தலைவர்களுடனான கலந்துரையாடலின் முடிவாக தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளான தங்கூசி வலைப்பாவனை் நீலநீச்சல் நண்டு பிடித்தலுக்கு அச்சுறுத்தலாக இருந்துவருகிறது. நீலநீச்சல் நண்டுத்தொழிலாளிகளின் வலைவீசிப்பிடித்தலுக்கு அச்சுறுத்தலாகவுள்ள இயந்திரப்படகுகளுக்கு எதிராக 2015 இல் நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டது. சட்டத்திற்கு எதிரான 150kg எடையுள்ள வலைகளை மாவட்ட செயலாளரிடம் ஒப்படைக்க ஒத்துக்கொண்ட 33 மீனவர்களுக்கு IOM சட்டபூர்வமான வலைகளை வழங்கியது. தாமகவே முன்வந்து வலைகளைக் கையளித்தவர்களுக்கு IOM வாழ்வாதார உதவிகளையும் நட்டஈடுகளையும் அவுஸ்திரேலியாவின் நிதியுதவியுடன் செய்துவந்தது.



***மீனவமுன்னேற்றத்திட்டத்தை விளங்கிக் கொள்ளலும் முகாமைத்துவம் செய்தலும்.:***

இலங்கையில் நீல நீச்சல் நண்டுபிடிப்பின் அளவைக்கட்டுப்படுத்தி ஒழுங்குமுறைகளையும் மார்க்கங்களையும் பயன்படுத்தி விருத்திசெய்வதற்கு அச்சமூகம் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளல் அடிப்படைத்தேவையாக உள்ளது. இதன் எல்லையும் இலக்கும் நீளஅடிப்படையிலான உற்பத்தித்திறனை அடிப்படையிலான குறிப்பிடப்பட்ட விஞ்ஞான முறைமதிப்பீடுகளான இறப்புவீதம் பிறப்புவீதம் அதியுயர் வளர்ச்சி நீள அடிப்படையில் 50% -90%வரையான முதிர்ச்சி என்பன மூலம் கணிப்பிடப்படுகின்றது. தெற்குத் தென்கிழக்காசிய நாடுகளில் நீலநண்டுத்தொகைகளில் இருந்து ஆய்வு செய்த முறைகளின் படி புத்தளம் கடல்நீரேரியில் பெண் நீலநீச்சல் நண்டினம் பற்றி Dr. Prince, Dr. Hordyck என்பவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



ஒக்டோபரில் NARA இன் Dr. Sisira Haputhanthri என்பவரின் தலைமையில் யாழ்ப்பாணக்கரையோரப்பகுதிகளில் உள்ள SLBSC இன் தொகை பற்றி ஒருவருடகால விஞ்ஞான ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. NARA இன் இந்த ஆய்வு SLBSC இன் நீள அகல தொடர்பு, வளர்ச்சி, இறப்புவீதம், பருவமடையும் அளவு, இனவிருத்தி, உற்பத்தி பருவம்,, நீள அடிப்படையில் உற்பத்தி திறன், உணவுக்கட்டுப்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியதாகக் காணப்பட்டது. NARA இன் இறுதி அறிக்கையானது நீளஅகல தொடர்பு, வளர்ச்சி, இறப்புவீதம், பருவமடையும் அளவு, இனவிருத்தி, உற்பத்தி பருவம்,, நீள அடிப்படையில் உற்பத்தி திறன், உணவுக்கட்டுப்பாடு ஆகியவற்றைக் கொண்ட தொகை மதிப்பீட்டை உள்ளடக்கியதாகக் காணப்படும். இதற்குரிய இடைக்கால விஞ்ஞான ஆய்வு அறிக்கையை NARA 2015 மார்ச் இறுவாரத்தில் சமர்ப்பிக்கும்.

டிசம்பரில் SEASL இன் மீன்பிடி முன்னேற்றத்திட்டக் குழு புத்தளம் மாவட்ட FSCU உடன் சேர்ந்து மீன்பிடி முன்னேற்றம் பற்றிய ஒரு ஆய்வை மேற்கொள்ளும். சூழல்பாதுகாப்பு அமைப்பு Environmental Conservation Trust மீனவமுன்னேற்றத்திட்டக் குழுவுடன் புத்தளம் கடல்நீரேரியை வளப்பபடுத்திய பின்னர் சட்டவிரோத அடிமட்ட இயந்திரப்படகுகள் பற்றியும் அதன் தண்டங்கள் பற்றியும் உண்மைநிலமையை ஆராய்வதற்கு சிரேஸ்ட உத்தியோகத்தர்களைச் சந்திக்கும்.



டிசம்பர் இறுதியில் SEASL இலங்கை கடலுணவு ஏற்றுமதி நிறுவனங்களுடன் ஒரு சந்திப்பை ஏற்படுத்தியது. Alpex Marine (Pvt) Ltd., Ceylon Fresh (Pvt) Ltd., Ceylon Food (Pvt) Ltd., and Taprobane Seafood (Pvt) Ltd., ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கு 2015 இல் மீனவமுன்னேற்றத்திட்டம் பற்றி சுருக்கமாக விளக்கப்பட்டது. நீலநீச்சல் நண்டின் தயாரிப்புக்களின் நேரடியானதும் மறைமுகமானதுமான நன்மைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. நீலநீச்சல் நண்டின் தயாரிப்புக்களுக்குரிய உலக சந்தையில் தென்கிழக்காசியாவும் வடஅமெரிக்காவும் இருந்துவருகின்றது.




2015 இல் SLBSC இன் நீல நீச்சல்நண்டு பிடித்தலுக்கும் அதன் தயாரிப்புகளுக்கும் வர்த்தகரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் ஆதரவு நல்கப்படும் என்ற இலங்கை கடலுணவு ஏற்றுமதி நிறுவனங்களின் வர்த்தகப்பிரதிநிதிகளின் உறுதிமொழிப்படி கூட்டம் நிறைவேறியது.

2014இல் மீன்பிடி முன்னேற்றத்திட்ட ஆவனங்கள், மூன்று அபிவிருத்தித்திட்டங்கள், ஆண்டுத்திட்டம், நிதி ஒதுக்கீடு என்பன இதன் அங்கத்தவர்கள் தங்கள் செயல்களை வெற்றிகரமாகச்செய்தார்கள் என்பதைப்பிரதிபலிக்கும் வகையிலும் செய்கைக்கண்காணிப்பு மதிப்பீடு என்பன வருடமுடிவில் மேம்படுத்தப்பட்டன என்பதையும் எடுத்துக்காட்டுகின்றது. SEASL இன் www.seasl.lk என்ற இணையத்தளத்திலிருந்து தேவையான விபரங்களைப்பெறுக் கொள்ள முடியும்.***SEASL's implementation, management and performance monitoring of the SLBSC fishery improvement project were made possible by generous core FIP funding from the National Fisheries Institute Crab Council (NFI CC).***



***FIP ஐ வடமாகாண கடற்றொழில் மீனவ சமூகத்தினர் நடைமுறைப்படுத்துகின்றனர் : பாக்கு நீரிணைக் குடாவின் இலங்கைப் பகுதியையும் மற்றய அரைப் பகுதி இந்தியாவிலும் நீல நீச்சல் நண்டுக்கான பிரதான மீன்பிடிக் கடல் உள்ளது.*** மன்னார் , கிளிநொச்சி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் உள்ள மீனவர்கள் விரிகுடாவின் ஆழமற்ற, சேற்றுத் தண்ணீரிலிருந்து ஆண்டு முழுவதும் நண்டுகளைப் பிடிக்கின்றனர். ஆடி மாதத்தில் , பொருளாதார அபிவிருத்தி (Economic Development (LEED)) செயற்திட்டத்தினூடாக சர்வதேச தொழில் நிறுவனத்தின் சட்டரீரியான உள்நாட்டு அதிகாரமளிக்கும்தன்மை அதன் ஆதரவை பூநகரி மீனவர் கூட்டுறவுச் சபை யூனியனுக்கு (Fishermen’s Cooperative Society Union (FCSU)) முன்னேற்றச் செயற்திட்டத்தில் மீனவ சமூகங்கள் வடமாகாண SLBSC கடற்றொழிலில் ஈடுபடுவதை மேம்படுத்துவதற்கு வழங்குகின்றது.






ஐப்பசி, கார்த்திகை மற்றும் மார்கழி மாதங்களில் இரணமாதாநகர் மீனவர் கூட்டுறவு அங்கத்தவர்கள் பாக்கு விரிகுடாவில் நீல நீச்சல் நண்டு கடற்றொழிலின் பூநகரி FCSU இன் LB SP மதிப்பீட்டின் ஒரு பகுதியாக 6,000 நண்டுகளுக்கும் மேலாக அளந்து, நிறை அறிந்ததுடன் பால்வகைப்படுத்தினர் . ஐப்பசி மாதத்தில் Dr. Adrian Hordyck மற்றும் Dr. Jeremy Prince (Murdoch பல்கலைக்கழகம், Western Australia), என்பவர்களால் சேகரிக்கப்பட்ட வெளிக்களத் தரவின் முதல்நிலைப் பகுப்பாய்வு பாக்கு விரிகுடா நீல்நீச்சல் நண்டு கடற்றொழிலுக்கான SPR 0.31 ஆகும் எனக் குறிப்பிட்டது. வெவ்வேறு உணர்வுத்தன்மையை ஆராய்வதற்கு முதன்மையன LB SP அளவியல்புகள் மாறிக் காணப்பட்டபோது (*i.e.,* M/k, Linf, $L_{50}$ and $L_{95}$) ,கடற்றொழிலுக்கான SPR 0.25 to 0.35 அணிவகைப்படுத்தப்பட்டது. F/M ஆனது 4.02 க்குச் சமனாகியது, இது உயர் மீன்பிடி அழுத்தத்தைக் குறிக்கின்றது. இந்த விளைவு ஐப்பசி மாத மாதிரியில் (Dr. Adrian Hordyck *pers. comm*.) (கீழே பார்க்கவும்) பெருமளவு பெண்வர்களின் குறைவான எண்ணிக்கை காரணமாக இருக்கலாம். பாக்கு விரிகுடா நீல்நீச்சல் நண்டு கடற்றொழிலுக்கான SPR எப்படியாயினும் for MSY (0.3)[1]க்கான MSC’s lower SPR proxy க்கு மேலானதாகும். பிடிபடுமுன்னரே அநேகமான பெண் நண்டுகள் முட்டையிடுவதற்கு ஏதுவாக பெரிய அளவிலான பெண் நண்டுகள் கடற்றொழிலில் ( கீழே பார்க்கவும்) வந்தடைகின்றன. Murdoch பல்கலைக்கழகத்தினால் பகுப்பாய்வு செய்யப்பட்ட – பூநகரி FCSU ஆல் சேகரிக்கப்பட்ட முதல் நிலைத் தரவு ஒரு நீண்ட காலத்துக்கு இருக்கக்கூடிய மட்டத்தில் பாக்கு நீரிணைக் குடாவில் இலங்கைப் பக்கத்தில் நீல நீச்சல் நண்டு வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன எனக் கூறுகின்றது.

மார்கழி மாதத்தில், மன்னார் , யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலிருந்து FCS தலைவர்களுக்காக தொடரான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பூநகரி FCSU ஒழுங்கு செய்தது. வளம் வாய்ந்த கடற்றொழில் முகாமைத்துவப் படிகள் தொடர்பாக நீல நீச்சல் நண்டுகளின் உயிரியல் மற்றும் சுற்றுச் சூழலியல் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. SLBSC கடற்றொழில் முன்னேற்ற செயற் திட்டத்தின் மூலங்கள் மற்றும் நடைமுறை நிலைபற்றி விளக்கம் வழங்கப்பட்டதுடன் நீல் நீச்சல் நண்டுக் கடற்றொழிலை முன்னேற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் மற்றும் சவால்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு செயலமர்வும் நண்டுக் கைத்தொழிலைப் பாதிக்கும் பிரதான பிரச்சினைகள் மற்றும் அவற்றுக்கான தேவையான எடுபக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் மீனவ தலைவர்களால் எடுத்துரைக்கப்பட்டதுடன் நிறைவு எய்தியது. ***SLBSC கடற்றொழில் முன்னேற்ற யெற்திட்டத்துக்கு ஆதரவாக பூநகரி FSCU இன் ஈடுபாடு. The ILO ஐ.நா LEED செயற்திட்டத்தினால் நிதியிடப்படுகின்றது. இது படி 3 சர்வதேச சமூக சீரமைக்கும் நிகழ்ச்சிக்கான அவுஸ்திரேலிய முகவரால் நிதியிடப்படுகின்றது.***

ஐப்பசி மாதத்தில் வங்காள விரிகுடா பெரிய கடல்சார் சுற்றுச்சூழல் முறை நிகழ்ச்சிக்கு ( Bay of Bengal Large Marine Ecosystem (BOBLME)) .கடற்றொழில் நீரியல் வளங்களுக்கான அமைச்சு ( The Ministry of Fisheries and Aquatic Resources (MFAR) ) ஒரு செயற் திட்டத்தைச் சமர்ப்பித்தது. கார்த்திகை மாதத்தில் கடற்றொழில் நீரியல் வளங்களுக்கான திணைக்களத்தின் செயலாளர் நாயகமான திரு. நிமல் ஹெட்டியாராய்ச்சி , (the Director General, Department of Fisheries and Aquatic Resouces (DFAR) ) SEASL’s SLBSC FIP இணைப்பாளரையும் , NARA இலிருந்து பணியாளர்கள் மற்றும் அலுவலகர்களையும் DFAR / BOBLME உப செயற்திட்டத்தின் அமுலாக்கம்பற்றி கலந்துரையாடுவதற்காக அழைத்திருந்தார். இந்த உப செயற்திட்டத்தின் கீழ் , DFAR அலுவலகர்களும் பணியணியினரும் நாலு மாவட்டங்களில் SLBSC கடற்றொழில் மீன்பிடி முயற்சி அளவீடு ஒன்றை நடாத்துவார். இந்த அளவீட்டின் விளைவுகளின் அடிப்படையில் வயம்ப பல்கலைக்கழக கலாநிதி.செவந்தி ஜெயக்கொடியின் தொழில்நுட்ப உதவியுடன் SLBSC கடற்றொழில் FIP இன் ஏனைய அங்கத்தவர்களோடு சேர்ந்து ஒரு கடற்றொழில் முகாமைத்துவத் திட்டத்தை DFAR உருவாக்கும். கடற்றொழில் முகாமைத்துவத்துக்கு . BOBLME’s இன் சுற்றுச்சூழல் அணுகுமுறையை உபயோகித்து நகல் கடற்றொழில் முகாமைத்துவம் அபிவிருத்தி செய்யப்படும்.

[1] J. Prince (2014) A Technical Report on a SPR@Size assessment of the Blue Swimmer Crab fishery in Southeast Sulawesi. Technical Report for IMACS, USAID. Oct. 2014 pp. 30

***2015 இல் மீனவ முன்னேற்றத்திட்டத்தின் செயற்பாடுகள்:*** SEASL 2015இலும் தனது மீனவ முன்னேற்றத்திட்டத்தை தொடரவிருக்கின்றது. இந்த ஆண்டு இதனைக்கட்டியெழுப்புவதற்காக NFI CC, IOM, ILO UN, BOBLME ஆகிய நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றன. SEASL இதனை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வதுடன் புதிய நிறுவனங்களையும் தூதரகங்களையும் 2015 இன் மீனவ முன்னேற்றத்திட்டத்திற்கு வரவேற்கின்றது.

## SLBSC இன் காலாண்டு மீனவமுன்னேற்றத்திட்ட இலக்குகள்

Monterrey Bay Aquarium இன் கடலுணவு பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து செயலாற்ற ஆரம்பித்தல்.
சட்டபூர்வமான வளங்களையும் SLBSC இன் தயாரிப்புக்களின் தரப்பிரிப்பாளர்களையும் வியாபாரிகளையும் இனங்கானல்.
***Marine Stewardship Council*** இனுடைய தொழில்நுட்பப்பயிற்சிகளை வழங்கல்.
FSCU இன் பூனகரி உபதிட்டத்தையும் SEASL இன் குடாக்கடல் தொகை மதிப்பீட்டையும் நிறைவேற்றல்.
நீல நீச்சல் நண்டுபிடித்தலுக்குத் தடையாக இருக்கும் இழுவைப்படகிற்கு எதிராக சட்ட ஆலோசனை வழங்கல்.
SLBSC இன் உயிரியல் மதிப்பீடு பற்றிய NARA இன் இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தல்.
SLBSC இன் இரண்டாவது தேசிய ஒருங்கிணைப்புக்கூட்டம்
2015/2016 இற்கான நிதித்திட்டம் ***US$100,000***

## SLBSC இன் 2ம் காலாண்டு மீனவமுன்னேற்றத்திட்ட இலக்குகள்

***அறிக்கை சமர்ப்பித்தல்*** *தொகைமதிப்பீடும் மீன்பிடித்தலின் விளைவுகளும் வலையைத்தெரிவுசெய்தலும்*
*SLBSC இன் அறுவடையைக்கட்டுப் படுத்துவதற்கான தந்திரோபாயங்கள்*
***MSC இன் கொள்கைப்படி*** *SLBSC இன் சூழலியற்பாதிப்புக்களைச் சீர்செய்வதற்கான உபதிட்டங்களை எழுதிசமர்ப்பித்தல்.*
*SLBSC* இன் மீனவமுன்னேற்றத்திட்டத்திற்கான ஆவணங்களை மீளாய்வு செய்தல்.

.


## SLBSC இன் 3ம் காலாண்டு மீனவமுன்னேற்றத்திட்ட இலக்குகள்

நீள அடிப்படையிலான உற்பத்தித்திறன் பற்றிய தொழில்நுட்பப்பயிற்சி
***Dr. Prince & Dr. Hordyck*** அவர்களால் வழங்கப்படும்.
*அறுவடையைக் கட்டுப்படுத்துவதற்கான விதிகளையும் உபகரணங்களையும் ஒழுங்குபடுத்தல்.*

## SLBSC இன் 4ம் காலாண்டு மீனவமுன்னேற்றத்திட்ட இலக்குகள்

SLBSC இன் நீள அடிப்படையிலான் உற்பத்தித்திறனைப் பயன்படுத்தி வருடாந்த தொகை மதிப்பீடும்
SLBSC மீனவமுன்னேற்றததிட்டத்திற்காக அனுமதிக்கப்பட்ட ***MSC*** மதிப்பீட்டை நிறைவேற்றல்
*SLBSC* இன் மீனவமுன்னேற்றத்திட்டத்திற்கான ஆவணங்களை மீளாய்வு செய்தல்

***மீனவ முன்னேற்றத்திட்டத்தின் சுருக்கம் :*** SLBSC இன் மீனவ முன்னேற்றத்திட்டம் கடலுணவு நிறுவனங்கள் மூலம் மீன்பிடித்தலை முன்னேற்றும் ஒரு செயற்பாடாகும் (***processors***), இதனை ஒழுங்குபடுத்துபவர்கள் அரச அதிகாரம் பெற்றவர்கள் (***regulators***) உற்பததியாளர்கள், செயற்பாட்டாளர்கள் (***producers***), ஒழுங்குபடுத்துனர்கள் SLBSC இன் மீனவ முன்னேற்றத்திட்டத்தின் அங்கத்தவர்கள் (***members)***ஆவார்கள். மீன்பிடித்தலை முன்னேற்றுவதற்கான திட்டங்களை அமுல்படுத்தத பொருளாதார ஒத்துழைப்புகளை வழங்குபவர்கள் பங்குதாரர்கள் (**Partners). SLBSC** இன் மீனவ முன்னேற்றத்திட்டத்தின் நீண்டகால இலக்கை அடைவதற்கு உடனடிக்குறிக்கோள்கள் தற்போது நேரடியாக அமுல்படுத்தப்படுகின்றன. **SLBC** இன் மீனவ முன்னேற்றத்திட்டம் **MSC** இன் மீன்பிடித்தலின் தொகைமதிப்பீட்டு முறைமையைப் பின்பற்றி நீண்டகால இலக்குகள் அடையப்படும்.




*SLBSC* இன் மீனவ முன்னேற்றத்திட்டத்தின் நீண்டகால இலக்கு மீன்பிடித்தலை ஒரு மட்டம் வரை வரையறை இன்றி தொடரமுடியும் என்பதாகும். நீலநீச்சல்நண்டின் உயிரியல்சுகாதாரத்ததைப் பேனுதல் அவற்றின் இனவேறுபாடு, உடலமைப்பு, சூழலியற்தன்மை என்பவற்றை அறிவதுடன் அவற்றின் விளைச்சலுக்கு எதிர்விளைவுகளைத் தரக்கூடிய காரணிகளைக் கண்டறிய வளங்களையும் ஆலோசனைகளையும் வழங்கி மீன்பிடிச்சமூகத்தின் சமூக பொருளாதார வழங்களை தற்காலத்திலும் எதிர்காலத்திலும் சமத்துவத்துடன் வழங்குதல் ஆகும்.

*English, Sinhala and Tamil Versions available at www.seasl.lk/index.php/sustainablefisheries/slbscfip*

SEASL Seafood Exporters' Association of Sri Lanka